Teachingninja.in

Latest Govt Job updates

Private Job updates

Free Mock tests available

Visit - teachingninja.in

# MHC

# DJ

## Previous Year Paper

### (Prelims) Paper-I

### 30 Sept, 2023

Teachingninja.in

# MHCTNDJFN-P-I

Q.Booklet Series : **A**

Q.Booklet No. [ ] Registration No. [ ]

**Date of Examination : 30.09.2023** **Marks: 100**

**Duration : (09.00 a.m. to 12.00 noon)** **(0.25 negative mark**

**(Forenoon Session)** **for each incorrect answer)**

## OBJECTIVE TYPE

## PAPER – I

## 2023

---

**Read the following instructions carefully before answering the questions.**

---

SEAL

## IMPORTANT INSTRUCTIONS

1. The candidates will be supplied with Question Booklet 15 minutes before commencement of the examination.

2. This Question Booklet contains 100 objective type questions. Before answering, the candidates are requested to verify whether all the questions are in seriatim and ensure that there are no blank pages in the question booklet. In case, any defect is noticed, it shall be reported to the Invigilator immediately and before commencement of the Examination, so as to be replaced with a new (same series) Question Booklet. Thereafter, it will not be replaced.

3. The Question Paper is bi-lingual, i.e., in **English and Tamil**. All questions carry equal marks i.e., $100 \times 1 = 100$ marks. **For each incorrect answer, 0.25 marks will be deducted.** In Case of any inconsistency between English and Tamil versions of the questions, the English version will prevail over the Tamil version.

4. The candidates should write their Registration Number in the space provided on the top right side of this page. Do not write anything else on the Question Booklet, except in the space provided for rough work.

5. Personalized OMR Answer Sheet of the candidates will be supplied by the Invigilator for answering the questions. If the OMR Answer sheet is in anyway defective, the same shall be brought to the notice of the Invigilator immediately before shading, so as to supply a spare OMR answer sheet. Thereafter, it will not be replaced.

[Turn over

Teachingninja.in

SPACE FOR ROUGH WORK

Teachingninja.in



Teachingninja.in

1. A minor acting through a guardian:

(A) Can be inducted as a partner of a firm
(B) Can be admitted to the benefit of partnership with personal liability
(C) Can be admitted to the benefit of partnership without personal liability
(D) Cannot be admitted to the benefit of partnership

காப்பாளர் மூலம் செயல்படும் இளவர் ஒருவர்

(A) நிறுவனம் ஒன்றின் பங்குதாரர் ஆக்கப்படலாம்
(B) தனி நபர் பொறுப்புறுதியுடன் கூட்டாண்மையின் நன்மையைப் பெற அனுமதிக்கப்படலாம்
(C) தனி நபர் பொறுப்புறுதியின்றி கூட்டாண்மையின் நன்மையைப் பெற அனுமதிக்கப்படலாம்
(D) கூட்டாண்மையின் நன்மையைப் பெற அனுமதிக்கப்படலாகாது

2. As per Section 2(d)(ii) of the Copyright Act, 1957, unless the context otherwise requires the 'author' in relation to 'musical work' means?

(A) A Composer
(B) A Singer
(C) A Conductor
(D) A Producer

பதிப்புரிமைச் சட்டம், 1957, பிரிவு 2 (ஈ)(ii)ன் படி, தறுவாயின் தேவை வேறானாலன்றி, 'இசைப் படைப்பு' தொடர்புடைய படைப்பாளி என்பவர்,

(A) இசையமைப்பாளர்
(B) பாடகர்
(C) நடத்துநர்
(D) தயாரிப்பாளர்

3. Control over the subordinate courts including posting and promotion of persons belonging to the judicial services vests with the:

(A) State Government
(B) Central Government
(C) President of India
(D) High Court

நீதித்துறைப் பணிகள் சார்ந்த நபர்களின் பணியமர்த்தம் மற்றும் பணி உயர்வு உட்பட கீழமை நீதிமன்றங்களின் மீதான கட்டுப்பாடு அளிக்கப்பட்டிருப்பது

(A) மாநில அரசாங்கத்திடம்
(B) மத்திய அரசாங்கத்திடம்
(C) இந்தியக் குடியரசுத் தலைவரிடம்
(D) உயர் நீதிமன்றத்திடம்



Teachingninja.in

4. Service of summons of a Civil Suit on the defendant thereto can be ordered by publication in a newspaper, when:

(A) The plaintiff is willing to bear the costs thereof

(B) The defendant stays outside the territorial jurisdiction of the court

(C) The defendant is avoiding service or cannot be served in ordinary way

(D) The plaintiff fails to take steps for service on the defendant

ஓர் உரிமையியல் வழக்கில் எப்போது அழைப்பாணை செய்தித்தாள், ஒன்றில் பிரசுரிக்கப்படுவதன் வாயிலாக சார்வு செய்யப்பட ஆணையிடப்படலாம்;

(A) வாதி அதன் செலவுகளை ஏற்றுக்கொள்ள முன் வரும்போது

(B) எதிர்வாதி நீதிமன்றத்தின் நில ஆள்வரைக்கு வெளியே தங்கியிருக்கும் போது

(C) எதிர்வாதி சார்வு செய்யப்படுவதை தவிர்க்கிறார் அல்லது இயல்பான முறையில் சார்வு செய்ய முடியாது என்ற நிலையில்

(D) எதிர்வாதிக்கு சார்வு செய்யப்பட நடவடிக்கை எடுப்பதற்கு வாதி தவறும் நிலையில்

5. Which provision of the Indian Constitution recognizes right of accused to remain silent?

(A) Article 19 (B) Article 21

(C) Article 20 (D) Article 14

குற்றஞ்சாட்டப்பட்டவர் அமைதிகாக்கும் உரிமையை ஏற்பளிக்கும் இந்திய அரசமைப்பின் உறுப்பு எது?

(A) உறுப்பு 19 (B) உறுப்பு 21

(C) உறுப்பு 20 (D) உறுப்பு 14



Teachingninja.in

6. Who gives oath to the Governor?

(A) President

(B) Prime Minister

(C) Chief Justice of the High Court

(D) Chief Justice of the Supreme Court

ஆளுநருக்கு சத்தியப் பிரமாணம் செய்து வைப்பவர் யார்?

(A) குடியரசுத்தலைவர்

(B) பிரதமர்

(C) உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி

(D) உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி

7. Every person is competent to contract:

(A) Who is of the age of majority according to the law

(B) Who is of sound mind

(C) Who is not disqualified from contracting by any law

(D) All the above

கீழ்க்கண்ட தகுதி கொண்ட ஒவ்வொரு நபரும் ஒப்பந்தத்தில் ஈடுபட தகுதி படைத்தவர் ஆவார்

(A) சட்டப்படி நிறை வயதினை அடைந்தவர்

(B) சீரான மனநிலை வாய்க்கப்பெற்றவர்

(C) யாதொரு சட்டத்தாலும் ஒப்பந்தத்தில் ஈடுபடுவதிலிருந்து தகுதி நீக்கம் செய்யப்படாதவர்

(D) மேற்குறிப்பிட்ட அனைத்தும்



Teachingninja.in

8. Consent is said to be free when it is not caused by:

(A) Coercion
(B) Undue influence
(C) Fraud
(D) All the above

சம்மதம் என்பது கீழ்கண்டவற்றால் உருவாக்கப்படாதவரை தடையற்ற சம்மதம் எனப்படும்

(A) வற்புறுத்தல்
(B) தகாத செல்வாக்கு
(C) மோசடி
(D) மேற்கண்டவை அனைத்தும்

9. Any appeal may be admitted after the prescribed period, if the appellant satisfies the court that:

(A) He is ready to pay additional court fee stamps
(B) He had sufficient cause for not preferring the appeal within the prescribed period
(C) (A) and (B) above
(D) None of the above

கீழ்க்கண்ட எந்த விடயத்தில் மேல்முறையீட்டாளர் நீதிமன்றத்தை திருப்திப்படுத்துவாரேயானால், குறித்துரைக்கப்பட்ட காலத்திற்குப் பின்பாக எந்த மேல்முறையீடும் ஏற்றுக்கொள்ளப்படலாம்

(A) அவர் கூடுதல் நீதிமன்றக் கட்டண வில்லைகளைச் செலுத்தத் தயாராக இருக்கிறார்
(B) மேல்முறையீட்டை நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்குள் தொடராமல் இருந்ததற்கு அவரிடம் போதுமான காரணம் இருந்தது
(C) மேற்குறிப்பிட்ட (A) மற்றும் (B)
(D) மேற்கண்டவற்றுள் எதுவுமில்லை

10. Who appoints Attorney General of India?

(A) Supreme Court
(B) President
(C) High Court
(D) Parliament

இந்தியாவின் தலைமை வழக்குரைஞரை நியமிப்பவர் யார்?

(A) உச்ச நீதிமன்றம்
(B) குடியரசுத் தலைவர்
(C) உயர் நீதிமன்றம்
(D) நாடாளுமன்றம்



Teachingninja.in

11. Which Article of the Constitution of India abolished 'Untouchability' and forbids its practice in any form?

(A) Article 14 (B) Article 15
(C) Article 16 (D) Article 17

இந்திய அரசமைப்பின் எந்த உறுப்பு 'தீண்டாமை'யை ஒழித்து எவ்வடிவிலும் அதன் செயல்பாட்டைத் தடுக்கிறது?

(A) உறுப்பு 14 (B) உறுப்பு 15
(C) உறுப்பு 16 (D) உறுப்பு 17

12. As per Section 11 of the Hindu Adoption and Maintenance Act, 1956 to adopt a male child by a Hindu female she must be senior to the child by at least:

(A) 21 years (B) 18 years
(C) 14 years (D) 12 years

இந்து மகவேற்பு மற்றும் வாழ்க்கைப் பொருளுதவிச் சட்டம், 1956, பிரிவு 11ன்படி, இந்துப்பெண் ஒருவர் ஆண் குழந்தை ஒன்றை மகவேற்பு செய்ய, அவர் அக்குழந்தையை விட குறைந்தபட்சம் ___________ ஆண்டு மூத்தவராக இருக்க வேண்டும்.

(A) 21 ஆண்டுகள் (B) 18 ஆண்டுகள்
(C) 14 ஆண்டுகள் (D) 12 ஆண்டுகள்

13. The normal procedure to conduct a trial for an offence under Section 138 of Negotiable Instrument Act, 1881 is:

(A) Warrant cases trial procedure
(B) Summons cases trial procedure
(C) Summary trial procedure
(D) Special procedure

1881 – ஆம் ஆண்டு மாற்று முறை ஆவணங்கள் சட்டப்பிரிவு 138-இன் கீழான ஒரு குற்றத்தின் விசாரணையை நடத்துவதற்கான பொதுவான நடைமுறை

(A) பிடியாணை வழக்குகளுக்கான விசாரணை நடைமுறை
(B) அழைப்பாணை வழக்குகளுக்கான விசாரணை நடைமுறை
(C) சுருக்க விசாரணை நடைமுறை
(D) சிறப்பு நடைமுறை



Teachingninja.in

14. What does the maxim, '*Leges Posteriores Priores Contrarias Abrogant*' mean?

(A) The law does not compel a person to do a thing which he cannot possibly perform

(B) Later laws repeal earlier laws inconsistent therewith

(C) No one is to be punished for the crime or wrong of another

(D) A new law ought to be prospective and not retrospective, in operation

"லெகஸ் போஸ்டெரியோரஸ் பிரயோரஸ் கான்ட்ராரியஸ் அப்ரோகன்ட்" என்ற சட்ட மூதுரையின் பொருள் என்ன?

(A) ஒரு நபரால் செய்யப்படுவதற்கு சாத்தியமில்லாத ஒன்றை செய்யுமாறு சட்டம் வற்புறுத்துவதில்லை

(B) பின்னர் எழுந்த சட்டங்கள், அவற்றோடு முரண்படும் முந்தைய சட்டங்களை நீக்கம் செய்யும்

(C) யாதொரு நபரும் பிறிதொருவரின் குற்றம் அல்லது தவறுக்காக தண்டிக்கப்படலாகாது

(D) புதியதோர் சட்டம் செயல்பாட்டில் முன்னோக்கு விளைவை கொண்டிருக்க வேண்டுமே தவிர பின்னோக்கு விளைவை அல்ல

15. "S.R. Bommai Vs. Union of India" is the landmark decision of the Supreme Court in respect of:

(A) Imposition of President Rule in the State

(B) Amendment to the constitution

(C) Personal liberty

(D) Privacy

எஸ்.ஆர். பொம்மை-எதிர்-இந்திய ஒன்றியம் என்ற வழக்கில், உச்சநீதிமன்றம் ———————— தொடர்பாக முக்கியத் தீர்ப்பளித்துள்ளது.

(A) மாநிலத்தில் குடியரசுத் தலைவர் ஆட்சியை அமல்படுத்துதல்

(B) அரசமைப்பில் திருத்தம் செய்தல்

(C) தனிப்பட்ட சுதந்திரம்

(D) அந்தரங்க உரிமை



Teachingninja.in

16. As per Section 147 of the Negotiable Instruments Act, 1881, every offence punishable under the said Act is:

(A) Compoundable

(B) Non compoundable

(C) Compoundable with the permission of the Court

(D) None of the above

1881-ம் ஆண்டு மாற்று முறை ஆவணங்கள் சட்டப்பிரிவு 147-ன் படி மேற்படி சட்டத்தின் கீழ் தண்டிக்கப்படத்தக்க குற்றம் ஒவ்வொன்றும்

(A) சமரசத்திற்குரியது

(B) சமரசத்திற்குரியது அல்ல

(C) நீதிமன்ற அனுமதியின்பேரில் சமரசத்திற்குரியது

(D) மேற்கூறப்பட்டவற்றுள் எதுவுமில்லை

17. In a suit for specific performance, if the relief for refund of earnest money is not claimed in the plaint, the court can allow the plaintiff to amend the plaint to include a claim for the said relief ————.

(A) Only before filing the written statement

(B) Only before commencement of trial

(C) At any stage of the proceedings

(D) Cannot allow to amend the plaint

ஏற்றதை ஆற்றுகைக்கான உரிமையியல் வழக்கொன்றில் முன்பணத்தைத் திருப்பிக் கொடுப்பதற்கான நிவாரணம் வழக்குரையில் கோரப்படவில்லை என்றால், நீதிமன்றமானது மேற்குறிப்பிட்ட நிவாரண கோருகையைச் சேர்த்து வழக்குரையைத் திருத்த வாதியை பின்வரும் சூழலில் அனுமதிக்கலாம்.

(A) எதிர் வழக்குரை தாக்கல் செய்வதற்கு முன்பாக மட்டும்

(B) விசாரணை தொடங்குவதற்கு முன்பாக மட்டும்

(C) வழக்கு நடவடிக்கைகளின் எந்த நிலையிலும்

(D) வழக்குரையைத் திருத்த அனுமதிக்கப்பட இயலாது



Teachingninja.in

18. An application to set aside the arbitral award has to be filed under ———— of the Arbitration and Conciliation Act, 1996.

(A) Section 31
(B) Section 32
(C) Section 33
(D) Section 34

இசைவுத் தீர்வத்தை இரத்து செய்வதற்கான விண்ணப்பம் ஒன்று 1996-ம் ஆண்டு பொதுவர் மற்றும் இசைவுத் தீர்ப்புச் சட்டத்தின் ———— ன்படி தாக்கல் செய்யப்பட வேண்டும்?

(A) பிரிவு 31
(B) பிரிவு 32
(C) பிரிவு 33
(D) பிரிவு 34

19. As per Section 2 of the Dissolution of Muslim Marriages Act, 1939, which of the following is a ground for obtaining a decree for dissolution of marriage by a woman?

(A) The whereabouts of the husband have not been known for a period of four years
(B) The husband has neglected or has failed to provide for her maintenance for a period of two years
(C) The husband has been sentenced to imprisonment for a period of seven years or upwards
(D) All the above

1939-ம் ஆண்டு இஸ்லாமியத் திருமணங்கள் முறிவுச் சட்டப்பிரிவு 2-ன் படி பின்வருவனவற்றுள் எது பெண்மணி ஒருவரால் மணவிலக்குக்கான தீர்ப்பாணையொன்றை பெறுவதற்கானதோர் அடிப்படைக் காரணம்?

(A) நான்கு ஆண்டு காலமாக கணவர் எங்கேயிருக்கிறார் என்று அறியப்படாமல் இருத்தல்
(B) கணவர், இரண்டாண்டு காலத்திற்கு அவளுக்கு வாழ்க்கைப் பொருளுதவி அளிப்பதில் அலட்சியம் செய்தார் அல்லது அவ்வாறு அளிக்க தவறி விட்டார்
(C) கணவர், ஏழு ஆண்டுகளோ அல்லது அதற்கு மேலான காலத்திற்கோ சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளார்
(D) மேற்கூறப்பட்ட அனைத்தும்



Teachingninja.in

20. Which of the following relief can be granted under the Specific Relief Act, 1963?

(A) Recovery of possession
(B) Ejectment of tenant
(C) Redemption of mortgage
(D) Perpetual Injunction

1963-ஆம் ஆண்டு குறித்தவகை பரிகாரச் சட்டத்தின் கீழ் பின்வருவனவற்றுள் எந்த பரிகாரம் அளிக்கப்படலாம்?

(A) உடைமையை மீளப்பெறுதல்
(B) வாடகைதாரரை வெளியேற்றுதல்
(C) அடைமானத்தை மீட்டல்
(D) நிரந்தர உறுத்துக்கட்டளை

21. Legal phrase "*Ipso Facto*" means

(A) In good faith
(B) From the very beginning
(C) By the very fact itself
(D) None of the above

"இப்சோ ஃபேக்டோ" என்ற சட்டச் சொற்றொடரின் பொருள்

(A) நன்னம்பிக்கைபேரில்
(B) மிகத் தொடக்கத்தில் இருந்தே
(C) இவ்வுண்மையினாலேயே
(D) மேற்கண்ட எதுவுமில்லை

22. As per Code of Civil Procedure, 1908, clerical or arithmetical mistakes in the judgments can be corrected by the Court ————

(A) At any time
(B) Within 7 days of pronouncing the judgment
(C) Within 15 days of pronouncing the judgment
(D) Within 30 days of pronouncing the judgment

1908ஆம் ஆண்டிய உரிமையியல் நடைமுறைச் சட்டத்தின்படி தீர்ப்புரைகளில் உள்ள எழுத்து அல்லது கணக்குத் தொடர்பான பிழை நீதிமன்றத்தால் ———— திருத்தப்படலாம்.

(A) எந்தச் சமயத்திலும்
(B) தீர்ப்புரை பகரப்பட்ட நாளிலிருந்து 7 நாட்களுக்குள்
(C) தீர்ப்புரை பகரப்பட்ட நாளிலிருந்து 15 நாட்களுக்குள்
(D) தீர்ப்புரை பகரப்பட்ட நாளிலிருந்து 30 நாட்களுக்குள்



Teachingninja.in

23. How much amount does an auction purchaser have to deposit immediately after the sale as per Order 21 Rule 84 of the Code of Civil Procedure, 1908?

(A) Ten percent on the amount of his purchase money
(B) Twenty five percent on the amount of his purchase money
(C) Fifty percent on the amount of his purchase money
(D) Rs.25,000/-

1908 ஆம் ஆண்டு உரிமையியல் நடைமுறைச் சட்டத்தின் கட்டளை 21, விதி 84இன் படி விற்பனைக்கு பின் உடனடியாக, ஏல கிரையதாரர் ஒருவர் எவ்வளவு தொகையை வைப்பீடு செய்ய வேண்டியிருக்கும்?

(A) அவரது கிரையத் தொகையில் பத்து சதவீதம்
(B) அவரது கிரையத் தொகையில் இருபத்தி ஐந்து சதவீதம்
(C) அவரது கிரையத் தொகையில் ஐம்பது சதவீதம்
(D) ரூ.25,000/-

24. Which one of the following is not a mode of transfer of property under the Transfer of Property Act, 1882?

(A) Exchange
(B) Lease
(C) Mortgage
(D) Will

1882ஆம் ஆண்டு சொத்துரிமை மாற்றுச் சட்டத்தின்படி பின்வருவனவற்றுள் எது சொத்தை மாற்றுவதற்கான வழிமுறை அல்ல?

(A) பரிமாற்றம்
(B) குத்தகை
(C) அடமானம்
(D) உயில்

25. What does "*Persona Non Grata*" in Latin means?

(A) No such person
(B) Ungrateful person
(C) Unacceptable person
(D) Fictitious person

"பெர்சோனா நான் கிரேட்டா" எனும் இலத்தீன் சொற்றொடரின் பொருள்

(A) அத்தகைய நபர் இல்லை
(B) நன்றி கெட்ட நபர்
(C) விரும்பப்படாத நபர்
(D) கற்பனையான நபர்



Teachingninja.in

26. Where the plaint is rejected before numbering of suit, the remedy available to the plaintiff is?

(A) Appeal under order XLI of Civil Procedure Code, 1908

(B) Revision

(C) The plaintiff has no remedy

(D) Appeal under order XLIII of Civil Procedure Code, 1908

ஒரு வழக்கு எண்ணிடப்படுவதற்கு முன்னர் அதன் வழக்குரை நிராகரிக்கப்பட்டால், வாதிக்கான பரிகாரம்

(A) உரிமையியல் நடைமுறைச் சட்டம் 1908 கட்டளை XLIன் கீழ் மேல்முறையீடு செய்யலாம்

(B) சீராய்வு மனு

(C) வாதிக்கு நிவாரணம் எதுவுமில்லை

(D) உரிமையியல் நடைமுறைச் சட்டம் 1908, கட்டளை XLIIIன் கீழ் மேல்முறையீடு செய்யலாம்

27. What does "*Ab Initio*" in latin means?

(A) In between

(B) At the end

(C) From the beginning

(D) None of the above

"அப் இனிசியோ" என்ற இலத்தீன் சொற்றொடரின் பொருள்

(A) இடைநிலை

(B) முடிவில்

(C) தொடக்கத்திலிருந்தே

(D) மேற்கண்ட எதுவுமில்லை



Teachingninja.in

28. Which of the following is not a valid reason for an employer to declare 'Lay-off'?

(A) Shortage of coal, power or raw materials

(B) Accumulation of stocks

(C) Break-down of machinery

(D) Financial stringency

கீழ்க்கண்டவற்றில் பணியமர்த்துநரால் தற்காலிக வேலை நீக்கம் செய்வதற்கு எது சரியான காரணம் இல்லை?

(A) நிலக்கரி, மின்சக்தி அல்லது மூலப்பொருட்கள் ஆகியவற்றின் பற்றாக்குறை

(B) இருப்பு குவிப்பு

(C) இயந்திரம் பழுதடைதல்

(D) நிதி நெருக்கடி

29. The concept of 'Lis Pendens' bars Transfer of properties:

(A) which are exclusively pending before the civil courts

(B) which are exclusively pending before the criminal courts

(C) which are pending before the civil and criminal courts

(D) none of the above

'நிகழ் வழக்கு' கோட்பாடு

(A) உரிமையியல் நீதிமன்றங்களில் மட்டும் வழக்கு நிலுவையில் இருக்கும்போது சொத்தை உரிமை மாற்றம் செய்வதைத் தடை செய்கிறது.

(B) குற்றவியல் நீதிமன்றங்களில் மட்டும் வழக்கு நிலுவையில் இருக்கும்போது சொத்தை உரிமை மாற்றம் செய்வதைத் தடை செய்கிறது.

(C) உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றங்களில் வழக்கு நிலுவையில் இருக்கும்போது சொத்தை உரிமை மாற்றம் செய்வதைத் தடைசெய்கிறது.

(D) மேற்கண்ட எதுவுமில்லை



Teachingninja.in

30. As against the order passed by the Co-operative Tribunal in C.M.A in surcharge proceedings,

(A) A Revision under Article 227 of the Constitution of India alone is maintainable

(B) A Writ under Article 226 of the Constitution of India alone is maintainable

(C) A Writ under Article 226 as well as revision under Article 227 of the Constitution of India is maintainable

(D) Second appeal in C.M.A alone is maintainable

கூடுதல் கட்டண நடவடிக்கைகளில், உரிமையியல் பல்வகை மேல்முறையீட்டில் கூட்டுறவு தீர்ப்பாயம் பிறப்பித்த ஆணைக்கு எதிராக

(A) இந்திய அரசமைப்புச் சட்டத்தின் உறுப்பு 227ன் கீழ் தாக்கல் செய்யப்படும் சீராய்வு மட்டும் நிலைக்கத்தக்கது.

(B) இந்திய அரசமைப்புச் சட்டத்தின் உறுப்பு 226ன் கீழ் தாக்கல் செய்யப்படும் நீதிப்பேராணை மட்டும் நிலைக்கத்தக்கது.

(C) இந்திய அரசமைப்புச் சட்டத்தின் உறுப்பு 226ன் கீழ் தாக்கல் செய்யப்படும் நீதிப்பேராணையும் உறுப்பு 227ன் கீழ் தாக்கல் செய்யப்படும் சீராய்வும் நிலைக்கத்தக்கன.

(D) உரிமையியல் பல்வகை மேல்முறையீட்டில் இரண்டாம் மேல்முறையீடு மட்டுமே நிலைக்கத்தக்கது.

31. Section 26 of the Indian Contract Act declares the agreement void on the ground of

(A) Absolute restraint only

(B) Partial restraint only

(C) Both absolute and partial restraint

(D) None of the above

இந்திய ஒப்பந்தச் சட்டம் பிரிவு 26 கீழ்க்கண்ட எந்தக் காரணங்களின் அடிப்படையில் ஒப்பந்தத்தைச் செல்லாது என்று கூறுகிறது?

(A) முழுமையான தடை மட்டும்

(B) பகுதியான தடை மட்டும்

(C) பகுதியான மற்றும் முழுமையான தடை இரண்டும்

(D) மேற்கூறிய எதுவுமில்லை



Teachingninja.in

32. As per Section 3(21) of the General Clauses Act, 1897, 'financial year' shall mean the year commencing on

(A) 1st day of March
(B) 1st day of January
(C) 1st day of April
(D) 1st day of September

பொது வகையங்கள் விளக்கச் சட்டம், 1897, பிரிவு 3(21)-ன்படி, 'நிதி ஆண்டு' என்பது ———— நாளிலிருந்து தொடங்குகிற ஆண்டு என்று பொருள்படும்.

(A) மார்ச் 1ம் நாள்
(B) ஜனவரி 1ம் நாள்
(C) ஏப்ரல் 1ம் நாள்
(D) செப்டம்பர் 1ம் நாள்

33. Funds belonging to Government of India are kept in

(A) Consolidated funds of India
(B) Public Account funds of India
(C) Contingency funds of India
(D) All the above

இந்திய அரசாங்கத்துக்கு சொந்தமான நிதி எங்கே வைக்கப்படுகிறது?

(A) இந்திய தொகுப்பு நிதி
(B) இந்திய பொது கணக்கு நிதி
(C) இந்திய எதிர்பாரா செலவு நிதி
(D) மேற்கண்ட அனைத்தும்

34. As per Section 23 of the Copyright Act, 1957 (substituted by Act 13 of 1992) the term of copyright in the case of literary, dramatic, musical or artistic work, which is published anonymously or psuedonymously shall subsist until ———— years from the beginning of the calendar year next following the year in which the work is first published.

(A) Thirty years
(B) Fifty years
(C) Sixty years
(D) Seventy years

பதிப்புரிமைச் சட்டம், 1957, பிரிவு 23 (சட்டம் 13/1992ஆல் மாற்றீடு செய்யப்பட்டது)ன்படி, பெயரில்லாமலோ புனைப்பெயரிலோ வெளியிடப்படுகின்ற ஓர் இலக்கிய, நாடக, இசை அல்லது கலைப் படைப்பைப் பொறுத்தவரையில், அந்தப் படைப்பு முதலில் வெளியிடப்பட்ட ஆண்டை அடுத்துப் பின்வரும் ஆங்கில ஆண்டின் தொடக்கத்திலிருந்து ———— வரையில் பதிப்புரிமை நிகழ்விலிருத்தல் வேண்டும்.

(A) முப்பது ஆண்டுகள்
(B) ஐம்பது ஆண்டுகள்
(C) அறுபது ஆண்டுகள்
(D) எழுபது ஆண்டுகள்



Teachingninja.in

35. Can a power of attorney holder continue to represent party if he/she got enrolled as an advocate during the proceedings?

(A) Yes (B) No

(C) Depends (D) None of the above

வழக்குரைஞராகப் பதிவு செய்யப்பட்ட ஆண்/பெண் ஒருவர் வழக்கு நடவடிக்கைகளில், பகர அதிகாரமுடையவராக ஒரு தரப்பினருக்கு பிரதிநிதியாக தொடரலாமா?

(A) ஆம் (B) இல்லை

(C) வழக்கைப் பொறுத்து (D) மேற்கண்ட எதுவுமில்லை

36. In which of the following cases Supreme Court held that Article 21 of the Constitution of India recognizes and protects the right of a woman to undergo termination of pregnancy if her mental or physical health is at stake?

(A) X Vs State of Uttar Pradesh

(B) X Vs State of Maharashtra

(C) X Vs State of Madhya Pradesh

(D) X Vs Principal Secretary, Health and Family Welfare Department, Government of NCT of Delhi

இந்திய அரசமைப்புச் சட்டத்தின் உறுப்பு 21, ஒரு பெண்ணின் மனநிலையோ உடல்நிலையோ சரிவர இல்லாதபோது, அவள் கருக்கலைப்பு செய்துகொள்ளும் உரிமையை அங்கீகரித்து பாதுகாக்கிறது என பின்வரும் எந்த வழக்கில் உச்ச நீதிமன்றம் தீர்மானித்துள்ளது?

(A) X-எதிர்-உத்திரப் பிரதேச மாநில அரசு

(B) X-எதிர்-மகாராஷ்டிர மாநில அரசு

(C) X-எதிர்-மத்தியப் பிரதேச மாநில அரசு

(D) X-எதிர்-முதன்மை செயலர், சுகாதார மற்றும் குடும்பநலத் துறை, என்.சி.டி. அரசு தில்லி



Teachingninja.in

37. Under which section an unregistered sale agreement can be received as evidence for considering the relief of specific performance?

(A) Proviso to Section 49 of Registration Act
(B) Proviso to Section 17 of Registration Act
(C) Proviso to Section 58 of Registration Act
(D) Proviso to Section 38 of Registration Act

ஏற்றதை ஆற்றுகை பரிகாரத்தினை பரிசீலனை செய்வதற்கான சான்றாக ஒரு பதிவு செய்யப்படாத விற்பனை உடன்படிக்கையை கீழ்க்கண்ட எப்பிரிவின் கீழ் பெறலாம்?

(A) பதிவுச் சட்டத்தின் 49வது பிரிவுக்குரிய வரம்புரையின் கீழ்
(B) பதிவுச் சட்டத்தின் 17வது பிரிவுக்குரிய வரம்புரையின் கீழ்
(C) பதிவுச் சட்டத்தின் 58வது பிரிவுக்குரிய வரம்புரையின் கீழ்
(D) பதிவுச் சட்டத்தின் 38வது பிரிவுக்குரிய வரம்புரையின் கீழ்

38. As per the latest Judgement of the Supreme Court in Smt. Dulu Deka Vs. State of Assam, the court held that once appointment is declared illegal & void *ab initio* ——————

(A) one cannot legally continue in service and cannot claim salary
(B) one can legally continue in service but cannot claim salary
(C) one cannot legally continue in service but can claim salary till the date of dismissal
(D) none of the above

திருமதி. துலு தேகா-எதிர்-அசாம் மாநில அரசு என்ற வழக்கில் உச்ச நீதிமன்றத்தின் அண்மையத் தீர்ப்புரையின்படி, பணி நியமனம் ஆரம்பத்திலிருந்தே சட்டத்திற்குப் புறம்பானது மற்றும் செல்லுபடியற்றது என அறிவிக்கப்பட்டுவிட்டால், —————— என நீதிமன்றம் தீர்மானித்தது.

(A) ஒருவர் சட்டப்படியாகப் பணியில் தொடர இயலாது மற்றும் ஊதியம் கோர இயலாது
(B) ஒருவர் சட்டப்படியாகப் பணியில் தொடரலாம், ஆனால் ஊதியம் கோர இயலாது
(C) ஒருவர் சட்டப்படியாகப் பணியில் தொடர முடியாது, ஆனால் பணி நீக்கம் செய்யப்படும் வரையில் ஊதியம் கோர முடியும்.
(D) மேற்கண்ட எதுவுமில்லை



Teachingninja.in

39. In a recent decision in Mukesh Singh vs State (NCT of Delhi), the Supreme Court has held that

(A) Test Identification Parade is violative of Article 20(3) of Constitution
(B) Test Identification Parade is not violative of Article 20(3) of Constitution
(C) Test Identification Parade is violative of Article 14 of Constitution
(D) Test Identification Parade is not violative of Article 14 of Constitution

முகேஷ் சிங்-எதிர்-அரசு (என்.சி.டி., தில்லி) என்ற சமீபத்திய வழக்கில், உச்ச நீதிமன்றம் தீர்மானித்ததாவது,

(A) அடையாள அணிவகுப்புச் சோதனை, அரசமைப்பின் உறுப்பு 20(3)-ஐ மீறிய செயலாகும்
(B) அடையாள அணிவகுப்புச் சோதனை, அரசமைப்பின் உறுப்பு 20(3)-ஐ மீறிய செயலல்ல
(C) அடையாள அணிவகுப்புச் சோதனை, அரசமைப்பின் உறுப்பு 14ஐ மீறிய செயலாகும்
(D) அடையாள அணிவகுப்புச் சோதனை, அரசமைப்பின் உறுப்பு 14ஐ மீறிய செயலல்ல

40. As per Section 26 of the Copyright Act, 1957, the term of copyright in the case of cinematograph film, shall subsist until ———— years from the beginning of the calendar year next following the year in which the film is published.

(A) 75 Years
(B) 60 Years
(C) 50 Years
(D) 40 Years

பதிப்புரிமைச் சட்டம், 1957, பிரிவு 26ன்படி, ஒரு திரைப்படத்தைப் பொறுத்தவரையில் அந்தத் திரைப்படம் வெளியிடப்படுகிற ஆண்டை அடுத்து பின்வரும் ஆங்கில ஆண்டின் தொடக்கத்திலிருந்து ———— ஆண்டுகள் வரை பதிப்புரிமை நிகழ்விலிருத்தல் வேண்டும்.

(A) 75 ஆண்டுகள்
(B) 60 ஆண்டுகள்
(C) 50 ஆண்டுகள்
(D) 40 ஆண்டுகள்



Teachingninja.in

41. As per Section 25 of the Right to Fair Compensation and Transparency in Land Acquisition, Rehabilitation and Resettlement Act, 2013, the Collector shall make an award within a period of ———— from the date of publication of the declaration under Section 19.

(A) Six months
(B) Twelve months
(C) Twenty Four months
(D) Thirty Six months

நிலம் கையகப்படுத்துதலில் வெளிப்படைத்தன்மை மற்றும் நியாய இழப்பீடு, மறுவாழ்வு மற்றும் மீள்-குடியேற்ற உரிமைச் சட்டம், 2013, பிரிவு 25ன்படி, பிரிவு 19-ன் கீழ் அறிவிப்பு வெளியிடப்படும் நாளிலிருந்து ———— காலத்திற்குள் ஆட்சியர் தீர்வளிப்பு வழங்கவேண்டும்.

(A) ஆறு மாதங்கள்
(B) பனிரெண்டு மாதங்கள்
(C) இருபத்து நான்கு மாதங்கள்
(D) முப்பத்தாறு மாதங்கள்

42. As per Section 2(1)(m) of the Patents Act, 1970, 'Patent' means

(A) A certificate for any special production granted under the Act.
(B) A patent for any manufacture granted under the Act.
(C) A patent for any invention granted under the Act.
(D) None of the above.

காப்புரிமைச் சட்டம், 1970, பிரிவு 2(1)(m) ன்படி, 'காப்புரிமை' என்றால்,

(A) இச்சட்டத்தின் கீழ் வழங்கப்படும் ஏதேனும் சிறப்பு உற்பத்திக்கான சான்றிதழ்
(B) இச்சட்டத்தின் கீழ் வழங்கப்படும் ஏதேனும் தயாரிப்புக்கான காப்புரிமை
(C) இச்சட்டத்தின் கீழ் வழங்கப்படும் ஏதேனும் கண்டுபிடிப்புக்கான காப்புரிமை
(D) மேற்கண்ட எதுவுமில்லை

43. As per Section 23 of the Land Acquisition Act, 1894, in determining the amount of compensation to be awarded for land acquired under the Act, the Court shall take into consideration the market value of the land on the date of publication of notification under

(A) Section 4(1)
(B) Section 6(1)
(C) Section 9(1)
(D) None of the above

நிலம் கையகப்படுத்துதல் சட்டம், 1894, பிரிவு 23ன்படி, இச்சட்டத்தின் கீழ் கையகப்படுத்தப்படும் நிலத்திற்கான இழப்பீட்டுத் தொகையைத் தீர்மானிக்கையில், எப்பிரிவின் கீழ் அறிவிக்கை வெளியிடப்படும் நாளில் நிலத்தின் சந்தை மதிப்பைக் கருத்திற்கொள்ள வேண்டும்?

(A) பிரிவு 4(1)
(B) பிரிவு 6(1)
(C) பிரிவு 9(1)
(D) மேற்கண்ட எதுவுமில்லை



Teachingninja.in

44. In the case of Bharat Cooking Coal Ltd., and another Vs. Shyam Kishore Singh, the Apex Court has held that change of a particular date of birth entered in the Service Register cannot be entertained at the fag end of service of the employee.

(A) Correct
(B) Not correct
(C) Not in this judgment
(D) (B) and (C) are correct

பாரத் குக்கிங் கோல் லிமிடெட் மற்றும் ஒருவர் -எதிர்-ஷியாம் கிஷோர் சிங் என்ற வழக்கில், பணியாளரின் பணிப் பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டிருக்கும் பிறந்த தேதியில் குறிப்பிட்ட மாற்றம் செய்யக் கோருதல், அவருடைய பணிநிறைவாகும் கடைசி நேரத்தில் ஏற்றுக்கொள்ளப்பட முடியாது என உச்ச நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

(A) சரி
(B) தவறு
(C) இத்தீர்ப்பில் இல்லை
(D) (B) மற்றும் (C) சரியானவை

45. Save an agreement to the contrary, under the Tamil Nadu Regulation of Rights and Responsibilities of Landlords and Tenants Act, 2017, it shall be unlawful to charge a security deposit in

(A) Excess of three times the monthly rent.
(B) Excess of six times the monthly rent.
(C) Excess of ten times the monthly rent.
(D) None of the above.

தமிழ்நாடு நிலவுரிமையாளர்கள் மற்றும் வாடகைதாரர்களின் உரிமைகளையும் பொறுப்புகளையும் முறைப்படுத்தும் சட்டம், 2017க்கு முரணாக ஓர் உடன்படிக்கை இருந்தாலன்றி, பிணை வைப்புத்தொகையாக ———— வைப்பீடு வசூலிப்பது சட்ட விரோதமானது.

(A) மாத வாடகைக்கு மூன்று மடங்கு அதிகமாக
(B) மாத வாடகைக்கு ஆறு மடங்கு அதிகமாக
(C) மாத வாடகைக்கு பத்து மடங்கு அதிகமாக
(D) மேற்கண்ட எதுவுமில்லை



Teachingninja.in

46. “Round tripping” relates to

(A) Making journey again and again
(B) Going on for trips
(C) Method of inflating revenue by fake transactions
(D) Selling the shares

“Round tripping” என்பது எதனுடன் தொடர்புடையது?

(A) மீண்டும் மீண்டும் பயணம் செய்தல்
(B) சுற்றுலா செல்லுதல்
(C) போலி நடவடிக்கைகள் மூலம் வருவாய் அதிகரிக்கும் முறை
(D) பங்குகளை விற்றல்

47. The Permanent Lok Adalat shall, while conducting conciliation proceedings or deciding a dispute on merit under the Act, be guided by the principles of natural justice, objectivity, fair play, equity and other principles of justice and

(A) Shall be bound by the Code of Civil Procedure, and Indian Evidence Act
(B) Shall not be bound by the Code of Civil Procedure, and Indian Evidence Act
(C) Shall be bound by the Code of Criminal Procedure, and Indian Evidence Act
(D) None of the above

சட்டத்தின் கீழ் இசைவிணக்க நடவடிக்கைகளை நடத்துகையில் அல்லது தகுதிப்பாட்டின்பேரில் ஒரு பிரச்சனையைத் தீர்மானிக்கையில், நிரந்தர மக்கள் மன்றம் (லோக் அதாலத்) ஆவது, இயற்கை நீதி, தற்சார்பற்ற தன்மை, நேர்மைநெறி, நடுநிலை நெறி போன்ற கோட்பாடுகளாலும், பிற நீதிக் கோட்பாடுகளாலும் வழிநடத்தப்படுவதோடு

(A) உரிமையியல் நடைமுறைச் சட்டத்தாலும், இந்திய சாட்சியச் சட்டத்தாலும் கட்டுப்படுத்தப்படுகிறது.
(B) உரிமையியல் நடைமுறைச் சட்டத்தாலும், இந்திய சாட்சியச் சட்டத்தாலும் கட்டுப்படுத்தப்படாது.
(C) குற்றவியல் நடைமுறைச் சட்டத்தாலும், இந்திய சாட்சியச் சட்டத்தாலும் கட்டுப்படுத்தப்படுகிறது
(D) மேற்கண்ட எதுவுமில்லை



Teachingninja.in

48. Every Award made by a Lok Adalat

(A) Shall not be final and binding on all the parties to the dispute and appeal shall lie to any court against the award

(B) Shall be final and binding on all the parties to the dispute and no appeal shall lie to any court against the award

(C) Shall not be final and binding on all the parties to the dispute and appeal shall lie before the Supreme Court against the award

(D) None of the above

மக்கள் மன்றத்தால் (லோக் அதாலத்தால்) வழங்கப்படும் ஒவ்வொரு தீர்வளிப்பும்,

(A) இறுதியானது அல்ல மற்றும் பிரச்சனைக்குரிய தரப்பினர்கள் அனைவரையும் கட்டுப்படுத்தக்கூடியது அல்ல, மேலும் அத்தீர்வளிப்பை எதிர்த்து மேல்முறையீடு எந்த நீதிமன்றத்திலும் நிலைக்கத்தக்கது

(B) இறுதியானது மற்றும் பிரச்சனைக்குரிய தரப்பினர்கள் அனைவரையும் கட்டுப்படுத்தக்கூடியது, மேலும் அத்தீர்வளிப்பை எதிர்த்து மேல்முறையீடு எந்த நீதிமன்றத்திலும் நிலைக்கத்தக்கதல்ல

(C) இறுதியானதல்ல மற்றும் பிரச்சனைக்குரிய தரப்பினர்கள் அனைவரையும் கட்டுப்படுத்தக்கூடியதல்ல, மேலும் அத்தீர்வளிப்பை எதிர்த்து மேல்முறையீடு உச்ச நீதிமன்றத்தில் நிலைக்கத்தக்கது

(D) மேற்கண்ட எதுவுமில்லை

49. Which part of the Constitution reflects the mind and ideals of the framers?

(A) Preamble

(B) Fundamental rights

(C) Directive principles

(D) Fundamental duties

அரசமைப்பின் எப்பிரிவு சட்டம் வகுப்பவர்களின் மனதையும் விழுமியங்களையும் பிரதிபலிக்கிறது?

(A) முகப்புரை

(B) அடிப்படை உரிமைகள்

(C) அரசுக் கொள்கையினை நெறிப்படுத்தும் கோட்பாடுகள்

(D) அடிப்படைக் கடமைகள்



Teachingninja.in

50. Limitation for filing a suit claiming compensation for defamation is:

(A) Three years from the date when the libel is published

(B) Three years from the date when the published libel comes to the knowledge of the plaintiff

(C) One year from the date when the libel is published

(D) One year from the date when the published libel comes to the knowledge of the plaintiff or from the date when the damage for which compensation is claimed is caused, whichever is later

அவதூறுக்கான தாவா தாக்கல் செய்து இழப்பீடு கோருவதற்கான காலவரை என்பது

(A) அவதூறு எப்போது பிரசுரிக்கப்படுகிறதோ, அந்த நாளில் இருந்து மூன்று ஆண்டுகள்

(B) பிரசுரிக்கப்பட்ட அவதூறு எப்போது வாதிக்கு தெரியவருகிறதோ, அந்த நாளில் இருந்து மூன்று ஆண்டுகள்

(C) அவதூறு எப்போது பிரசுரிக்கப்படுகிறதோ அந்த நாளில் இருந்து ஓராண்டு

(D) பிரசுரிக்கப்பட்ட அவதூறு எப்போது வாதிக்குத் தெரிய வருகிறதோ அந்த நாள் அல்லது இழப்பீடு கோரப்படும் ஊறு, எப்போது நிகழ்த்தப்பட்டதோ அந்த நாள், இவற்றில் எது காலத்தால் பிந்தையதோ அந்த நாளில் இருந்து ஓராண்டு

51. What is the meaning of the maxim "salus populi suprema lex esto"?

(A) Welfare of the Government is the supreme law

(B) Welfare of the Court is the supreme law

(C) Welfare of the people is the supreme law

(D) None of the above

"சலஸ் பாப்புலி சுப்ரீம் லெக்ஸ் எஸ்டோ" என்ற சட்ட முதுமொழியின் பொருள் என்ன?

(A) அரசின் நலந்தான் மேலான சட்டம்

(B) நீதிமன்றத்தின் நலந்தான் மேலான சட்டம்

(C) மக்களின் நலந்தான் மேலான சட்டம்

(D) மேற்கண்ட எதுவுமில்லை



Teachingninja.in

52. Delay in institution can be condoned under Section 5 of the Limitation Act:

(A) In respect of suits

